# தமிழ் நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம்,, புது எண் 378, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
*தொலைபேசி எண் 24312841.*

<u>வழக்கு எண் 6727/விசாரணை/2009</u>

<u>கோவையில் விசாரணை நடைபெற்ற நாள் 18-9-2009</u>

முன்னிலை: திரு ஜி. இராமகிருஷ்ணன, இ.ஆ.ப.(ஓ.)
மாநில தகவல் ஆணையர்

மனுதாரர்: திரு சி. பழனிச்சாமி, த/பெ திரு சின்னத்தம்பி,
**8/165-B,** சத்யமூர்த்தி நகர், மேட்டுப்பாளையம்.

பொது அதிகார அமைப்பு:

1. பொதுத் தகவல் அலுவலர், காவல் துறை ஆணையர் அலுவலகம், கோவை நகரம், கோயமுத்தூர்.
2. பொதுத் தகவல் அலுவலர், நில அளவைத் துறை உதவி இயக்குநர் அலுவலகம், கோயமுத்தூர்.
3. பொதுத் தகவல் அலுவலர், நகராட்சி ஆணையர் அலுவலகம், மேட்டுப்பாளையம்.

*****

இவ்வழக்கின் இன்றைய (18-9-2009) விசாரணைக்கு மனுதாரரும் பொது அதிகார அமைபபுகளின் சார்பாக மூன்று அலுவலகங்களின் பொதுத் தகவல் அலுவலர்களும் வந்திருந்தனர்.

மூன்று வெவ்வேறு அலுவலகங்களின் பொதுத் தகவல் அலுவலர்களிடம் மனுதாரர் தகவல்கள் கேட்டு தகவல் பெறாததாக மனுதாரர் இவ்வாணையத்திற்கு ஒரே மனுவில் மேல் முறையீடு செய்துள்ள நிலையில் ஒவ்வொரு அலுவலகம் குறித்த தகவல்கள் பற்றி தனித்தனியாக ஆணையம் கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது.

***<u>காவல் துறை குறித்த தகவல்:</u>***

மனுதாரர் தனது 10-12-2007 தேதியிட்ட மனுவில் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் தனிப் பிரிவுக்குத் தான் கொடுத்த மனுமீது எடுத்த நடவடிக்கையின் நகல் கேட்டுள்ளார். இது சம்பந்தமாக

மனுதாரர் தனக்கு எந்தவிதமான பதிலும் வரவில்லை என்று கூறி மேல் முறையீடு செய்துள்ளார். கோவை மாவட்ட காவல் துறை ஆணையர் அலுவலகத்தின் பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து 7-1-2008 தேதியிட்ட கடிதத்தின் மூலமாக, உரிய கட்டணம் செலுத்தித் தகவலைப் பெற்றுக்கொள்ளுமாறு மனுதாரர் அறிவுறுத்தப்பட்டுள்ளார். அக்கடிதம் அனுப்பப்பட்டதற்கான அத்தாட்சியை பொதுத் தகவல் அலுவலர் ஆணையத்திற்குக் காட்டினார். அக்கடிதம் தனக்கு வரவில்லை என மனுதாரர் தெரிவித்தார். தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் மூலமாக தகவல்கள் கோருகின்ற மனுதாரர்களுக்குத் தகவல்கள் வழங்குவதில் பொது அதிகார அமைப்புக்கள் சிறிது தாராளமாகச் செயல்படுவதில் எந்தத் தவறும் இல்லை என ஆணையம் கருதுவதால், மனுதாரர் கோரியுள்ள தகவல்களை எவ்விதக் கட்டணமுமின்றி இலவசமாக <u>இவ்வாணை பெறப்பட்ட ஒரு வார காலத்திற்குள் வழங்கவேண்டுமென்று</u> காவல் துறை ஆணையர் அலுவலகத்தின் பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையிடப்படுகிறது.

<u>*நில அளவைத் துறை குறித்த தகவல்:*</u>

தனது 12-12-2007 தேதியிட்ட கடிதத்தின் மூலமாக மாவட்ட ஆட்சியருக்கு தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்கீழ் ஒரு குறிப்பிட்ட இடத்ததை நில அளவை செய்து ஆக்கிரமிப்பை அகற்றுவது சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து விவரங்கள் கோரி மனுச் செய்துள்ளார். அந்த மனு 26-12-2007 அன்று கோவை நில அளவைத் துறை உதவி இயக்குநர் அலுவலகத்திற்கு மேல் நடவடிக்கைக்காக மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தால் அனுப்பப்பட்டுள்ளது. 31-12-2007 நில அளவைத் துறை உதவி இயக்குநர் மேட்டுப்பாளையம் வட்டாட்சியருக்கு மேல் நடவடிக்கைக்காக அனுப்பியுள்ளார் என்று மனுதாரருக்குத் தெரிவிக்கப்பட்டது. அதன் பின்னர் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது பற்றிய எந்தவிதமான தகவலும் நில அளவைத் துறை உதவி இயக்குநர் அலுவலகத்திலிருந்தோ, மேட்டுப்பாளையம் வட்டாட்சியரிடமிருந்தோ மனுதாரருக்குத் தரப்படவில்லை. எனவே, மனுதாரர் கோரியுள்ள தகவல்களை <u>இந்த ஆணை கிடைக்கப்பட்ட 15 தினங்களுக்குள்</u> மனுதாரருக்கு வழங்கி, மனுதாரருடைய ஒப்புகையைப் பெற்று, ஆணையத்திற்கு அறிக்கை அனுப்புமாறு நில அளவைத் துறை உதவி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

இதுகாறும் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்கீழ் பெறப்பட்ட மனுமீது உரிய நடவடிக்கை எடுத்து பதிலும் வழங்காத நில அளவைத் துறை

உதவி இயக்குநர் மீது இச் சட்டத்தின் பிரிவு 20(1)ன்படி ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கான விளக்கத்தை <u>இவ்வாணை பெறப்பட்ட 15 தினங்களுக்குள்</u> ஆணையத்திற்கு அனுப்புமாறு நில அளவைத் துறை உதவி இயக்குநருக்கு ஆணையிடப்படுகிறது.

*<u>மேட்டுப்பாளையம் நகராட்சி குறித்த தகவல்:</u>*

மேட்டுப்பாளையம் நகராட்சியைப் பொறுத்தவரையில் மனுதாரர் கோரியுள்ள தகவல்கள் 31-10-2008 வழங்கப்பட்டுவிட்டபடியால் இதன் மீது மேல் நடவடிக்கை எடுக்கத்தேவையில்லை என ஆணையம் முடிவு செய்கிறது.

**மாநில தகவல் ஆணையம்**

**ஒப்புதல் அளிக்கப்பட்ட நாள் 8.10.09**

**ஆணையத்தின் ஆணைப்படி** **உதவிப் பதிவாளர்**

<u>வழக்கு எண் 6727/விசாரணை/2009</u>
பொதுத் தகவல் அலுவலர்,
காவல் துறை ஆணையர் அலுவலகம்,
கோவை நகரம், கோயமுத்தூர்.

<u>வழக்கு எண் 6727/விசாரணை/2009</u>
பொதுத் தகவல் அலுவலர்,
நில அளவைத் துறை உதவி
இயக்குநர் அலுவலகம்,
கோயமுத்தூர்.

<u>வழக்கு எண் 6727/விசாரணை/2009</u>
பொதுத் தகவல் அலுவலர்,
நகராட்சி ஆணையர் அலுவலகம்,
மேட்டுப்பாளையம் நகராட்சி,
மேட்டுப்பாளையம்.

<u>வழக்கு எண் 6727/விசாரணை/2009</u>
திரு சி. பழனிச்சாமி,
த/பெ திரு சின்னத்தம்பி,
**8/165-B,** சத்யமூர்த்தி நகர்,
மேட்டுப்பாளையம் - 641 305.